# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 318 / 2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 3 |
| Name | : சுப்பையா. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.11.2023.

- - - - - - -

1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் எழுமலையில் குடியிருந்துவருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர், இரவு மணி சுமார் 2 மணிக்கு அ.சா.1 ராமர் அவரின் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த சமயம், ராமர் கத்தினார். அவர் சத்தத்தைக்கேட்டு நான் கதவைத் திறந்து பார்த்தேன். அப்போது கண்ணன் அரிவாளால், ராமரை கழுத்தில் வெட்டிவிட்டு ஓடிவிட்டதாக ராமர் என்னிடம் சொன்னார். கண்ணன் அரிவாளைக்கொண்டு போகும்போது நான் பார்த்தேன். அதன்பின்னர்

ராமரை, நானும், சடையாண்டியும் காவல் நிலையத்திற்கு கூப்பிட்டுச் சென்றோம். காவல் துறையினர் மருத்துவ மெமோ கொடுத்து ராமரை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவிட்டார்கள். உடன் நானும், சடையாண்டி, பிரேம்குமாரும் ஆகியோர்கள் மருத்துவமனைக்கு உடன் வந்தார்கள். முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்துவிட்டு ராமரை மேல்சிகிச்சைக்காக ராமரை மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தாரகள்.

குறுக்கு விசாரணை - இல்லை.

ஒப்பம் / திரு. P.S. ரஸ்கின் ராஜ், 16.11.23.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.